# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137 / 2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW20<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : **Tmt. Tamilselvi** |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 27th day of February, 2026.

**( Accused is present )**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

நேரம் 13.05 மணி

நான் தற்போது செங்கல்பட்டு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபரிந்து வருகிறேன். கடந்த 06-01-2025 அன்று இரவு 23.45 மணிக்கு ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல்

ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருமதி. நீலாவதி என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரினை பெற்று ஊத்துக்கோட்டைஅனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண். 1/2025 சட்டப்பிரிவுகள் 115(2), 64 of BNS ல் வழக்கு பதிவு செய்து அந்த முதல் தகவல் அறிக்கை கனம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தோம். முக்கியமான வழக்கு என்பதால் ஊத்துக்கோட்டை காவல் துணை கண்காணிப்பாளர் நிலையத்திற்கு வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். மேலும் காவல் துணை கண்காணிப்பாளர் என்னையும், திரு. தேவராஜ், ஆய்வாளர் அவர்களையும் இந்த வழக்கில் எதிரியை கைது செய்வதற்கும், அவருக்கு உதவியாக இருக்க எங்களை நியமித்து ஆணை பிறப்பித்தார். முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

**நேரம் 13.30 மணி**

முதல் தகவல் அறிக்கையின் படி சம்பவம் நடந்த நேரம் 06-01-2025 அன்று மாலை 4.00 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் படி சம்பவத்தின் போது பாதிக்கப்பட்ட பெண் சுயநினைவுடன் அழுது கொண்டிருந்தார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் படி சம்பவத்தின் ஈடுபட்ட நபர் அடையாளம் தெரியாத நபர் என்றாலும் அவருடைய தோராயமான வயது 40 என்றாலும் சரிதான். சம்பவம் நடந்த நேர்திற்கும், புகார் மனு பெறப்பட்ட 23.15 மணிக்கும் இடையேயான காலதாமதத்திற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஊத்துக்கோட்டை காவல் நிலைய சட்டம் ஒழுங்குட்பட்ட எல்லைக்குட்பட்ட பகுதி என்றால் சரிதான். பாதிகப்பட்டவர் பெண் என்றால் எங்கள் வரையறைக்குள் வரும். ஊத்துக்கோட்டை சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்திலிருந்து ரோந்து பணியில் இருக்கும் காவலர்கள் மூலமாக சம்பவம் குறித்து எனக்கு தெரியவந்ததா என்றால் இல்லை. நான் பதிவு செய்திருக்கும் Grave Crime Register ல் வரக்கூடிய வழக்கு என்றால் சரிதான். Grave Crime Register ல் வரக்கூடிய வழக்கில் பாதிக்கப்பட்ட

பெண் பட்டியல் இனத்தை சேர்ந்தவர் என தெரியவரும் பட்சத்தில் அது சம்பந்தமான புலன் விசாரணை அதிகாரி காவல் துணை கண்காணிப்பாளர் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை மேல் விசாரணைக்காக நான் காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் பதிவு செய்த Grave Crime Register வழக்கில் முதல் தகவல் அறிக்கையை உடனடியாக சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். அன்றைய தினம் இரவு என்பதால் மறுநாள் 07-01-2025 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் நீதிமன்றத்திற்கு அனுப்பிய முதல் தகவல் அறிக்கையின் அசல் என்னிடம் தற்போது காட்டப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையில் 08-01-2025 அன்று காலை 8.00 மணிக்கு பெறப்பட்டதாக நீதிபதி எழுதி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். அதே நேரத்தில் எதிரி கைது செய்யப்பட்டு நீதிபதி முன்பதாக ஆஜர் செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரரின் கையொப்பம் பெற்றுள்ளேனா என்றால் பெறவில்லை. நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் நான் சம்பவயிடம் சென்று பார்வையிட்டேனா என்றால் இல்லை. நான் போகவில்லை. முதல் தகவல் அறிக்கையில் பாதிகப்பட்ட பெண்ணிற்கு இரத்தபோக்கு இருந்தது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 40 வயது மதிக்கதக்க நபர் அவர் அணிந்த ஆடைகள் மற்றும் அங்க அடையாளங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவருடைய தோராயமான உருவ அமைப்பு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 07-01-2025 அன்று காவல் துணை கண்காணிப்பாளரின் உத்தரவின் பேரில் நான் இந்த வழக்கில் புலன் விசாரணைக்கு உதவியாக இருந்துள்ளேன் என்றால் சரிதான். நானும் தேவராஜ் என்ற ஆய்வாளரும் உதவியாக இருந்தோம். இந்த வழக்கின் தொடர்ச்சியாக எனக்கு எதிரி கைது செய்யப்பட்டது குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி எந்த தேதியில் எங்கு வைத்து கைது செய்யப்பட்டார் என்றால் செங்குன்றம் வன சரகத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். எதிரி கைது செய்யப்பட்டபோது

என்னுடன், தேவராஜ் ஆய்வாளருடன் நான் சென்றேன். எதிரியை கைது செய்யப்பட்டபோது என்ன நேரம் என்றால் 07-01-2025 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு கைது செய்யப்பட்டார். அவ்வாறு கைது செய்யப்பட்ட நபரை உடனடியாக காவல் நிலையம் அழைத்து சென்றோமா என்றால் இல்லை. அவரை பிடிக்க முற்பட்டபோது எதிரி ஓடியதால் எதிரியை தேவராஜ் ஆய்வாளர் திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் உடன் செல்லவில்லை. எதிரியை திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் ஆய்வாளர் தேவராஜ் கூறி தான் தெரியும். எதிரியை ஆய்வாளர் தேவராஜ் திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்று எனக்கு தெரியுமா என்றால் திருவள்ளூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டு பின்னர் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அந்த நேரங்களின் நான் உடன் செல்லவில்லை. நான் அன்றைய தினம் பணி முடித்து எத்தனை மணிக்கு வீட்டிற்கு சென்றேன் என்றால் நான் வீட்டிற்கு செல்லவில்லை. காவல் நிலையத்திற்கு 4.00 மணிக்கு சென்றேன். நான் எதிரியை கைது செய்தபோது எதிரியிடமிருந்து பொருட்களை கைப்பற்றினோமா என்றால் இருசக்கர வாகனத்தை ஆய்வாளர் தேவராஜ் கைப்பற்றினார். வேறு பொருட்கள் எதுவும் கைப்பற்றினாரா என்று எனக்கு தெரியாது. மறுபடியும் எதிரியை காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு அழைத்து வரப்பட்டார் என்றால் அன்று இரவு 22.30 மணிக்கு அழைத்து வரப்பட்டார். கைது செய்யப்பட்ட கைது நமுனாவில் கைது செய்யப்பட்ட நேரம் இரவு 22.15 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பின்னர் எதிரியை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டார். அவரை மறுநாள் காலை எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேனா என்றால் டிஎஸ்பி தான் அனுப்பி வைத்தார். அன்றைய தினம் காவல் நிலையத்தில் என்ன விசாரணை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் உடன் இருந்தேன் எனக்கு தெரியும். அன்றைய தினத்தில் எதிரி எந்த காவல்

நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தார் என்றால் ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தார். அவ்வாறு வைக்கப்பட்டிருந்ததற்கு முன்பு எதிரியை திரேக பரிசேதனை செய்தோம் என்றால் சரிதான். அது சம்பந்தமான ஆவணம் காவல் நிலையத்தில் உள்ளது என்றால் சரிதான். கைது நமுனாவில் கைது செய்யப்பட்டிருந்த நபரிமிடருந்து உடமைகள், பொருட்கள் என்ன பொருட்கள் கைப்பற்றினோமா என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. Arrest Memo – Column 8ல் கைது செய்யப்பட்ட நேரம் 07-01-2025, 22.15 என குறிப்பிடப்பட்டு கைது செய்யப்பட்ட நபர் பெயர் சாந்தி காவல் துணை கண்காணிப்பாளர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் ஏற்கனவே கூறியது போல கைது செய்யப்பட்ட 07-01-2025 பிற்பகல் 3.00 மணி செங்குன்றம் வன சரகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைது செய்யப்பட்ட நபரின் பெயர் ராஜா த/பெ. துரைசாமி என குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய விலாசம் 6/9, காவனூர் தெரு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் கதவு எண் 659 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியிடமிருந்து ஒரு செல்போன் கைப்பற்றப்பட்டதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த செல்போன் எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் செல்போன் எங்கு யாரால் கைப்பற்றப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் டிஎஸ்பி ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றினார். அந்த செல்போன் எவ்வாறு காவல் நிலையம் வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எதிரியிடமிருந்து வாங்கினார்கள். எங்கு வைத்து எதிரியிடமிருந்து செல்போன் வாங்கினார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து வாங்கினார்கள். நான் பொய்யாக கூறினேன் என்றாலும் அவ்வாறு வாங்குவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

**நேரம் 14.00 மணி**
**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137 / 2025

| Deposition of Witness for | Prosecution PW21 |
|---|---|
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : **Thiru. Devaraj** |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 27th day of February, 2026.

( Accused is present )

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

**நேரம் 15.00 மணி**

நான் தற்போது ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07-01-2025 ஆம் தேதி அதே காவல் நிலையத்தில் பணியில்

இருந்தபோது ஊத்துக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 1/2025, சட்டப்பிரிவுகள் 115(2), 64, 87 of BNS and Sec. 3(1)(w)(i), 3(2)(v), 3(1)(w)(ii) of SC/ST (POA) Act 1989, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No. 2/DSP/Utk/2025 தேதி 07-01-2025 ன் படி உதவி புலன் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டேன். இவ்வழக்கின் எதிரி ராஜா என்பவரை தேடிவந்த நிலையில் இரகசிய தகவலின் படி அன்றே பகல் 15.00 மணிக்கு செங்குன்றம் வன சரகத்தில் வைத்து கைது செய்ய முற்பட்டபோது போலீசாரிடமிருந்து தப்பிக்க முயன்றபோது எதிரிக்கு இடதுகாலில் காயம் ஏற்பட்டது. உடனே அவரை திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எதிரிக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து அரசு மருத்துவரின் பரிந்துரையின் படி மேல் சிகிச்சைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்து மருத்துவர்கள் என்னிடம் ஒப்படைக்க அவரை இரவு சுமார் 22.15 மணிக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் வந்து புலன்விசாரணை அதிகாரி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். எதிரியை காவல் துணை கண்காணிப்பாளர் கைது செய்து எதிரியிடமிருந்து செல்போனை கைப்பற்றினார். பின்னர் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் புலன் விசாரணைக்கு உதவியாக இருந்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

இந்த வழக்கு பட்டியல் இனத்தவருக்கு எதிரான குற்ற வழக்கு என்று தெரியுமா என்றால் தெரியும். பட்டியல் இனத்தவருக்கு எதிரான குற்ற வழக்குகள் POA ன் படி காவல் துணை கண்காணிப்பாளர் மட்டுமே விசாரணை செய்யக்கூடிய வழக்கு என்று தெரியுமா என்றால் தெரியும். அது சம்பந்தமாக விசாரணைக்கு காவல் துணை கண்காணிப்பாளர் நியமனம் செய்யக்கூடிய அதிகாரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் அவர் மேல் நிலையுள்ள அதிகாரிகளுக்கும் தான் உண்டு என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் காவல் கண்காணிப்பாளரால் 07-01-2025 அன்று காவல் துணை கண்காணிப்பாளர்

ஊத்துக்கோட்டை அவர்கள் புலன் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். காவல் துணை கண்காணிப்பாளரால் எனக்கும் மற்றொரு ஆய்வாளர் தமிழ்செல்விக்கும் வழங்கப்பட்ட நடைமுறை உத்தரவு ஒன்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நடைமுறை உத்தரவில் காவல் துணை கண்காணிப்பாளர் காவல் கண்காணிப்பாளரால் அவருக்கு வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் என்னை புலன் விசாரணைக்கு நியமனம் செய்தது போன்று எந்த விவரமும் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நானும் மற்றொரு ஆய்வாளர் தமிழ்செல்வியும் இந்த வழக்கில் காவல் துணை கண்காணிப்பாளரால் அமைக்கப்பட்ட தனிப்படையில் இருந்தோம் என்றால் சரிதான். தனிப்படையில் பணி என்ன என்று பார்த்தால் எந்த குறிப்பிட்ட அலுவலுக்காக நான் நியமனம் செய்யப்பட்டேனோ அதை முடித்துவிட்டு வெளியே செல்லவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் காவல் துணை கண்காணிப்பாளர் வேண்டுகோளின் பேரில் நான் எதிரியை தேடி 07-01-2025 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் எதிரியை செங்குன்றம் வன சரகத்தில் வைத்து பிடித்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்தபோது காவல் துணை கண்காணிப்பாளர் செங்குன்றம் வன சரக அலுவலகம் அருகிலுள்ள என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு நான் எதிரியை பிடிக்கும் போது எதிரியின் இருசக்கர வாகனத்தை சம்பவயிடத்திலிருந்து நான் கொண்டு வந்தோமா என்றால் இல்லை. எதிரியை நான் கைது செய்ய முயற்சித்தபோது எதிரிக்கு காயம் ஏற்பட்டு கால் உடைந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு எதிரியை திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கும், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளித்தோம் என்றால் சரிதான். அதுசம்பந்தமான மருத்துவ ஆவணங்களை காவல் துணை கண்காணிப்பாளரிடம் எதிரியை ஒப்படைக்கும்போது மேற்படி ஆவணங்களை ஒப்படைத்தோமா என்றால் ஒப்படைத்தோம். அவ்வாறு காவல் துணை கண்காணிப்பாளர் எதிரியை ஒப்படைக்கும்போது எதிரியை மருத்துவ

சிகிச்சையின் போதும் எதிரியை காவல் நிலையத்திற்கு கொண்டுவரும்போதும் எதிரியை திரேக சோதனை செய்தோமா என்றால் செய்தோம். மருத்துவ சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டபோது எதிரியின் உடைமைகள், பொருட்கள் எதுவும் மருத்துவர்களால் என்னிடம் எடுத்து ஆஜர் செய்யப்பட்டதா என்றால் இல்லை. எதிரியை காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கும் போது அவர் சம்பந்தப்பட்ட பொருட்களை காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் காவல் துணை கண்காணிப்பாளரிடம் செல்போன் ஏதாவது ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எதிரி காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு அதன் தொடர்ச்சியாக நடந்த வழக்கு புலன் விசாரணை அனைத்தும் காவல் துணை கண்காணிப்பாளருடைய தனிப்பட்ட விசாரணை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் தனிப்படையில் 07-01-2025 அன்று பிற்பகல் 1.00 மணிமுதல் காவல் நிலைய எல்லையை கடந்து சென்றது சம்பந்தமாக என்னுடைய காவல் நிலைய வழக்கு பொது நாட்குறிப்பில் நான் குறிப்பு எழுதி பதிவுசெய்துள்ளேனா என்றால் பதிவு செய்துள்ளேன். அதேபோல் எதிரி காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு எத்தனை மணிக்கு திரும்பவும் என்னுடைய காவல் நிலைய எல்லைக்குள் வந்ததாக பொது நாட்குறிப்பில் நான் குறிப்பு எழுதி பதிவுசெய்துள்ளேனா என்றால் பதிவுசெய்துள்ளேன். எத்தனை மணிக்கு சென்று எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்தேன் என்றால் எதிரியை தேடி பகல் 1.00 மணிக்கு கிளம்பி எதிரிக்கு சிகிச்சை அளித்து இரவு சுமார் 22.15 மணிக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம் வந்து எதிரியை ஒப்படைத்துவிட்டு மறுநாள் 08-01-2025 அன்று என்னுடைய காவல் நிலையத்திற்கு பணிக்கு சென்றுவிட்டேன். 07-01-2025 அன்று எதிரி காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு எதிரி சம்பந்தமான வழக்கு விசாரணையில் நான் குறிப்பிட்டு பங்கு பெற்றதாக எந்த விவரமும் காவல் துணை கண்காணிப்பாளர் என்னிடம் பதிவு செய்த வாக்குமூலத்தில் குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் தொடர்ச்சியாக அனைத்து

விசாரணைகளையும் காவல் துணை கண்காணிப்பாளர் தான் நடத்தி வந்தார் என்றால் சரிதான்.

**நேரம் 15.25 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.